
# மறக்கத்தான் முடியுமா? தலைவர் கலைஞரின் கண்மணியை!



நமது உயிரனைய தலைவர் கலைஞரின் சிந்தையில் என்றும் நீங்கா இடம் பெற்று, அவரின் சுவாசமாய், மனசாட்சியாய், கண்ணின் கருமணியாய், களமாடிய பெருவேங்கையாய் திகழ்ந்த ஐயா மாமேதை முரசொலி மாறன் அவர்கள், நமது தலைவர் கலைஞர் அவர்களை அவரது கால மெல்லாம் கண்ணீர் வடித்திடச் செய்து, காலதேவன் கரங்களில் கண்ணயர்ந்த நாள் நவம்பர் 23.

தலைவர் கலைஞர் அவர்களால் மடியிலிட்டு, தோளிலிட்டு, சீராட்டி, திறம்பட வளர்க்கப்பட்டு, திராவிட இயக்க எழுத்தாளராக, திரைப்பட வசனகர்த்தாவாக, நாடக ஆசிரியராக, பத்திரிகையாளராக, சிறந்த நாடாளுமன்றவாதியாக, ஒன்றிய அமைச்சராக, கழகத்தின் முக்கிய மூளையாக விளங்கிய தலைவர் கலைஞரின் வீர அபிமன்யு அறிவுப் பெட்டகம், ஐயா முரசொலி மாறன் அவர்கள் நமைவிட்டுப பிரிந்தார் எனும் செய்(தீ)தி நம்மை செந்தேளாய் துளைத்திட்ட நாள் 2003 -நவம்பர் 23.

உலகத் தமிழர்களின் உயர்வுக்காய், சோதனைகள் பல ஏற்று, வேதனைகள் பலதாங்கிய நமது தலைவர் கலைஞரின் மென்பட்டு இதயம், புண்பட்டு ரத்தக்கண்ணீர் கசிந்திட்ட நாள் நவம்பர் 23.

தலைவர் கலைஞரின் தோள்மீதும், மார்மீதும் தவழ்ந்துப் படர்ந்து, அவரால் தூக்கி அரவணைத்து, அவரது ஊனிலும், உணர்விலும், உயிர் மூச்சிலும் நீக்கமற நிறைந்து, “ எதை நினைத்து என்னைத் தேற்றிக் கொள்வது? “ என அவரது உள்ளம் உருகிட அறிவுலக மேதை ஐயா முரசொலி மாறன் அவர்கள் மீளாத் துயில் கொண்டு, இருபதாண்டுகள் உருண்டோடி, கடந்தே விட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்களால் அடையாளம் காட்டப்பட்ட நல்முத்தாய், கழகத்தின் சொத்தாய், தான் உயிரோடிருந்த நாள் வரை, உணர்வு மிஞ்சியிருந்த கடைசி நிமிடங்கள் வரை, கலைஞர்! கலைஞர்!! என சிந்தையெல்லாம் நிறைந்திருந்த அதிசய அரசியலாளர் மாறன் அவர்கள் தலைவர் கலைஞரை தனது மானசீக ஆசானாய், அன்னையாய், தந்தையாய், ஆத்தாவாய், தாத்தாவாய் எண்ணி, அவரது நிழலில் வளர்ந்து, அரசியல், கலை, இலக்கிய திரையுலகில் வலம் வந்து, தனிப்பெரும் ஆற்றல், திறமை, கற்பனை, தனக்கிருந்தும், எல்லாப் புகழும் கலைஞருக்கே! எனப் பெருமை கொண்ட பாசப் பெட்டகம், பண்பின் சிகரம் ஐயா முரசொலி மாறன் அவர்கள்.

வெளுத்ததெல்லாம் பாலெனவும், வஞ்சகரேயானாலும், அவர் தம் நெஞ்சம் முழுவதும் நஞ்செனும் சிந்தனை இருப்பினும், தன்னை நாடி வந்து விட்டால், அவரின் நோட்டம் அறியாமல் வாட்டம் கண்டு, இரக்கம் கொண்டு, பின் ஏமாறும் தூய முல்லை மலர் உள்ளம் கொண்ட நமது தலைவர் கலைஞர் அவர்களுக்கு, நல்லவர், நயவஞ்சகர், நரிக்குணத்தினர் எவரெனத் தரமறிந்து, தலைவருக்கு எடுத்தியம்பும் மதியூகியாக விளங்கி, வித்தைகள் பல நிகழ்த்தும் தலைநகரத்து அரசியலில், தலைவருக்கு பக்கபலமாக துணை நின்று, இடர் பல களைந்தவர் அறிவுடை ஐயா மாறன் அவர்கள். அதே டெல்லி தர்பார் அரசியலில், சுழன்றடிக்கும் சூறாவளிப் பெருஞ்சுழலில் ஆடாமல், அசையாமல், அழுத்தமாய் வேர்பிடித்து, தந்திரங்கள் பல அறிந்த தலைவர் கலைஞரின் இந்திரஜித்தாக திகழ்ந்தவர் ஐயா அவர்கள்.

அரசியல் சட்ட சிற்பி, அண்ணல் அம்பேத்கர் அவர்களைப் பற்றி அறிந்திட்ட போது, இங்கிலாந்து இலண்டன் மாநகரில் உள்ள மிகப்பெரிய பழமைவாய்ந்த நூலகத்தில் உள்ள நூற்களை கார்ல் மார்க்ஸுக்கு பிறகு அதிகம் படித்தவர் எனப் பெருமை கொண்ட செய்தி தென்பட்டது.

அதேபோல் அறிவுடை ஆசான்களாக பேரறிஞர் அண்ணாவும், தலைவர் கலைஞரும் அமையப்பெற்றதால், “ புஸ்தகம் அஸ்த பூசனம் (புத்தகத்தை ஏந்தி இருப்பது கரங்களுக்கு அழகு ) என்பது போல் அறிவுநிறை செய்திகள், ஆச்சரியம் ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள், பலவற்றை தனது இளமை முதல் பார்த்து, வியந்து, தானும் அதுபோலவே திகழ வேண்டுமென, தன்னை தயார் படுத்திட பெரும் புத்தகங்களை படித்த இளவயது மாறன் அவர்கள் நாடாளுமன்ற நூலகத்தில் உள்ள ஆயிரக்கணக்கான புத்தகங்களை ஆழ்ந்துப் படித்திட்ட வெகுசிலரில் இவரும் ஒருவரே என எண்ணிடும் போது, எப்படி பண்டித நேரு அவர்கள் தாம் இந்திய விடுதலைக்காக சிறைப்பட்டிருந்த இறுக்கம் மிகுந்த சூழலிலும் தான் அறிந்தவற்றை தனது இனிய மகள் இந்திராபிரிய தரிசினிக்கு எழுதிய கடிதங்கள் பின்னாளில் Dicovery of India Letters to Indra priyadarshni என்று அகிலம் போற்றும் நூல்களானதோ அதைபோலவே மாறன் அவர்கள் திருவாரூர் பள்ளி மாணவனாக, சேலம் கல்லூரி மாணவனாக பயின்ற காலகட்டங்களில் தலைவர் கலைஞரும் தான் கடுங்காவல், கொடுஞ்சிறையேகிய நாட்களில் அன்புக் கண்மணி மாறனுக்கு, நாட்டு நடப்பை, உலகப் புரட்சி, தொழிலாளர் எழுச்சி என கடிதங்கள் மூலம் கட்டாயப் பயிற்சி தந்ததை நினைத்து மனம் பெருமை கொள்கிறது.

அண்ணா அவர்கள் சொன்னது போல், நேரு கட்டி முடிக்கப்பட்ட கோபுரம்! அன்று நாம் கொட்டிக் கிடந்த செங்கல் என்பதால் இந்த செய்தி மக்கள் செவிகளில் அறியப்படாத செய்தியானது.

தலைவர் கலைஞரிடம் தான் பெற்ற அரசியல் பயிற்சி, அவரது சாயலில் எழுத்தில் பக்குவம் பெற்று, கழகத்தின் வாளாகவும், கேடயமாகவும் விளங்கிய முரசொலி ஏட்டில் ஆசிரியராக உயர்வு பெற்று, கழகத்தின் கொள்கைகளை முழங்கிய அவரது பத்திரிகை பணிபோற்றுதலுக்குரியதாகும்.

அவரது பொறுப்பில் முரசொலி வந்திட்ட காலங்களில் பல்வேறு பணிச் சுமை இடை யேயும் மாறன் அவர்கள் படைத்திட்ட கட்டுரைகள், கேலிச் சித்திரங்கள், தலையங்கம், கேள்வி பதில் போன்றவை கழகத்தோழர்களின் கருத்திற்கு விருந்தாய் அமைந்தது.

1976-ல் நெருக்கடி நிலையில் கடுமையாகத் தாக்கப்பட்டு, ஜன்னி நோய் கண்டு உடல் துவண்டு, உபாதைகள் மிகுந்து, ஒடிந்து விழும் தேகம் கொண்டிருந்தும், உள்ளத்தில் தலைவர் கலைஞர் அவர்களால் ஊட்டப்பட்ட உறுதியுடன் நெருக்கடி கால கொட்டடியில் முரட்டு காவல்துறை மிருகங்களால் பட்ட அடிகளால் உடல் நலம் சீர்கெட்டு, இறுதியில் வீரமரணம் அடைந்த தியாகதீபம், நாடாளுமன்ற உறுப்பினராய்த் திகழ்ந்து, கல்லினும் கொடிய மனம் கொண்ட காவல்துறை கயவர்களால் வதைக்கப்பட்டு, சிதைக் கப்பட்ட கொள்கை வேங்கை நமது தமிழினத்தளபதி அவர்களின் உயிர் காத்த உத்தமப் பெருந்தொண்டன், தலைவர் கலைஞர் அவர்களை, “ மறைந்து விட்டாயா? மாணிக்கப் பரிதியே! எனப் பதறி, கதறச் செய்த மாவீரன் சிட்டிபாபு அவர்கள் 5.1.1977 அன்று இறந்தது குறித்து அரசாங்கம் வெளியிட்ட மருத்துவக் குறிப்பில், நீரிழிவு, மாரடைப்பு, குடலிறக்கம், மல ஜலம் கழிப்பதில் தடை ஆகிய வியாதிகள் சிட்டிபாபு அவர்களுக்கு இருந்தது என்று 5.1.1977 அன்று மத்திய மருத்துவமனையில் தீவிர சிகிச்சை வார்டில் மாரடைப்பு காரணமாக மரண மடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுகண்டு வெகுண்டெழுந்த முரசொலி மாறன் அவர்கள் மிசா கொடுமைகளின் கொடுந்தாக்குதல் தனக்கு கடும் வலியை ஏற்படுத்தியதையும் சகித்துக் கொண்டு, அரசின் அறிக்கை குறித்து ‘முரசொலி’யில் எழுப்பிய வினாக்கள் இன்றளவும் விடையில்லாமல், விழி பிதுங்கி நிற்கிறது.

1. சிறைச்சாலையில் சிட்டிபாபு மிருகத்தனமாக தாக்கப்பட்டது உண்மையா? இல்லையா?

2. முன்பே அவர் மாரடைப்பால் பாதிக்கப்பட்டவர் என்றால், அத்தகைய நோயாளி கைது செய்யப்பட்டு காவல் வைக்கப்பட்ட காரணம் என்ன?

3. அவர் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டதேன்?

4. வெளிநோயாளியாய் சிகிச்சை பெற பொது மருத்துவமனைக்கு அனுப்பும்படி அவர் கேட்டதுண்டா? இல்லையா?

5. எப்போது அவர் முதல் தடவையாக வெளி நோயாளியாக சிகிச்சை பெற, பொது மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார்?

6. அதற்கிடைப்பட்ட நாட்கள் எத்தனை?

7. உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பாமல் காலம் கடந்து அனுப்பப்பட்டதின் காரணம் என்ன?

என அவர் எய்தியக் கேள்விக் கணைகளைக் கண்டு, அரசாங்கத்தார் அதிர்ச்சியடைந்து, வாயடைந்து போய் நின்றனர்.

கழகத்திற்கோ, தலைவர் கலைஞருக்கோ, சோதனை, தொல்லை, துயர், இழிவு ஏற்படுமானால், அதை எதிர்கொண்டு களைய உடனடியாக என்ன செய்ய வேண்டுமென்று தலைவர் கலை ஞரின் மனம் நினைக்கிறதோ, அத்தகைய செயலை, பத்திரிகை வாயிலாக, பண்பட்ட கட்டுரைகள் வடிவாக, செய்தி துணுக்கு, கருத்துப் படங்கள் மூலம் சம்பந்தப்பட்டவர்களை திக்கு, முக்காடச் செய்திடும் சாதுரியம் மிக்கவர் நமது ஐயா முரசொலி மாறன் அவர்கள்.

வழக்கறிஞர்
**வெ.அன்புவாணன்**
கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர்



இன்றும் டெல்லியில் நிகழ்த்தப்படும் சதி செயல்களால் கழகம் களைத்துப் போய்விட வில்லை யெனினும், இந்நேரம் முரசொலி மாறன் இருந்திருக்க வேண்டும் என அதற்குண்டான ஆதார நிகழ்வுகளை அசைபோட்டு எண்ணத்தோன்றாத இயக்கத் தலைவர்கள் இல்லை.

அத்தகு துயர் மிகுந்த நாட்களில் தலைவர் கலைஞருக்கு தோளோடு, தோள் கொடுத்து, தேள் கொட்டிய வலி போன்ற சந்தர்ப்பங்களில் அது சற்றும் தலைவரை பாதிக்காத வண்ணம் இரவு பகல் பாராமல் பணியாற்றிய தலைவர் கலைஞரின் நெஞ்சம் நிறைந்த டெல்லி பிரதிநிதி முரசொலி மாறன் அவர்கள் இன்றில்லை.

அவர் மறைந்த பின் நிகழ்ந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில், தலைவர் கலைஞர் அவர்கள், “ கூப்பிட்டதும் குரல் கொடுக்க, உள்ளேன் ஐயா என்றுரைக்க உயிரனைய தம்பி மாறன் இல்லையே “ என அவர் உள்ளத்தில் உதிரம் கசிந்தபடியே கலங்கி நின்றார்.

தாய்மாமன் மருமகன் உறவில் கம்சன் கண்ணனாக உயிரைக் குடிக்காமல், உயிரைக் கொடுத்தும் தலைவரின் உயிரைக் காப்பேன் என தான் வகுத்துக் கொண்ட கொள்கையில் இறுதிவரை துடித்தது அவரின் இதயம்.

அப்படி தலைவரை காக்க உடுக்கை இழந்தும் இடுக்கண் பல ஏற்றும் ஜெயலலிதா ஆட்சியில் காவல்துறை ஏவலர்களின் கோரதாண்டவத்தால் பட்டமரமாய் வீழ்ந்த அவர் பட்ட அடிகளாலே நோயுற்று தலைவருக்காய் சிதைந்து போனதை பெரும்பேறாய் ஏற்ற பெருவீரன் ஐயா முரசொலி மாறன் அவர்களின் இந்த 20 ஆம் ஆண்டு நினைவு நாளில் தலைவர் கலைஞரின் மீது அவர் கொண்டிருந்த உணர்வு, பற்று, பாசம், இவற்றை இன்றைய நமது அண்ணாவாய், அவரது அறிவாயுதமாய், தலைவர் கலைஞராய், அவரது கனிவாய், பணிவாய் திகழும் திராவிட நாயகர் தலைவர் தளபதியவர்களின் பால் கொண்டு, அவரின் நாட்டை வென்றெடுக்கும் மீட்புப் பணிக்கு ஒன்றிணைந்து, வென்றெடுக்க துணைபுரிவோம் என இந்நாளில் சபதமேற்போம்!

மறக்கத்தான் முடியுமா?

தலைவர் கலைஞரின் கண்ணான கண்மணியை!

---

### கலைஞர் மண்டலம்: கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும்

# 2வது இளைஞர் அணி மாநாடு விளக்க இருசக்கர வாகனப் பிரச்சாரப் பேரணி - வருகை தரும் முழு விவரம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக் கிணங்க, இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு செயலாக்க திட்டத்துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி வருகின்ற 17.12.2023 அன்று சேலத்தில் நடைபெறும் தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டிற்கு, அழைப்பு விடுத்து கலைஞர் மண்டலம் சார்பாக இருசக்கர வாகனப் பிரச்சாரப் பேரணி, இன்று (23.11.2023 -வியாழக்கிழமை) கடலூர் கிழக்கு மாவட்டம் சிதம்பரம், புவனகிரி, காட்டுமன்னார் கோவில் தொகுதிகளுக்குட்பட்ட, கீழ்க்கண்ட பகுதிகளுக்கும், 25.11.2023 சனிக்கிழமை அன்று குறிஞ்சிப்பாடி, கடலூர் தொகுதிக்குட் பட்ட கீழ்க்கண்ட பகுதிகளுக்கும் இருசக்கர வாகனப் பிரச்சாரப் பேரணி. கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி வருகைதர உள்ளது. அதுசமயம் இந்நிகழ்ச்சிகளை சம்மந்தப்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், இளைஞரணி அமைப் பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திடவும்.

மேலும் இந்நிகழ்ச்சிகளில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாநகர மேயர், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிமன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் இளைஞரணி மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் இளைஞர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**கடலூர் கிழக்கு மாவட்டத்தில் இருசக்கர வாகனப் பேரணி விபரம்**

**23.11.2023 (வியாழக்கிழமை)**

| நேரம் | வழி | நிகழ்ச்சிநடைபெறும்இடம் | நிகழ்ச்சியில்கலந்துகொள்ளும் ஒன்றியம்/நகரம்/பேரூர் |
|---|---|---|---|
| காலை 9.00 மணி | கொள்ளிடம் வழியாக | கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கவல்லம் படுகைபாலம் அருகில் வரவேற்பு | குமராட்சி மத்திய ஒன்றியம் குமராட்சி மேற்கு ஒன்றியம் |
| காலை 9.30 | உசுப்பூர் மாரியப்பா நகர் வழியாக | அண்ணாமலை நகர் | குமராட்சி கிழக்கு ஒன்றியம் அண்ணாமலை நகர் பேரூர் |
| காலை 10.00 மணி | SP கோவில் தெரு வழியாக | தெற்கு வீதி, சிதம்பரம்நகரம் | சிதம்பரம் நகரம் |
| காலை 10.15மணி | கஞ்சித்தொட்டி வழியாக | வண்டிகேட் | பரங்கிப்பேட்டை வடக்கு ஒன்றியம் பரங்கிப்பேட்டை தெற்கு ஒன்றியம் பரங்கிப்பேட்டை பேரூர் கிள்ளை பேரூர் |
| காலை 10.30 மணி | மணலூர் வழியாக | கீரப்பாளையம் நான்கு ரோடு | கீரப்பாளையம் கிழக்கு ஒன்றியம், கீரப்பாளையம் மேற்கு ஒன்றியம் |
| காலை 11.00 மணி | புவனகிரி வெள்ளாற்று பாலம் வழியாக | புவனகிரி கடைவீதி | புவனகிரி கிழக்கு ஒன்றியம் புவனகிரி பேரூர் |
| காலை 11.30 மணி | மஞ்சக்கொல்லை மிராளூர் வழியாக | சேத்தியா தோப்பு கூட்ரோடு | கம்மாபுரம் தெற்கு ஒன்றியம் கம்மாபுரம் வடக்கு ஒன்றியம் கம்மாபுரம் மத்திய ஒன்றியம் திருமுட்டம் வடக்கு ஒன்றியம் கெங்கைகொண்டான் பேரூர் |
| காலை 11.45 மணி | எம்.ஆர்.கே.சுகர்மில் வழியாக | சேத்தியா தோப்பு கடைவீதி | புவனகிரி மேற்கு ஒன்றியம் சேத்தியா தோப்பு பேரூர் |
| மதியம் 12.30 மணி | கந்தகுமாரன் வழியாக | லால்பேட்டை கடைவீதி | குமராட்சி வடக்கு ஒன்றியம் குமராட்சி தெற்கு ஒன்றியம் லால்பேட்டை பேரூர் |
| மதியம் 1.00 மணி | லால்பேட்டை பேரூர் காட்டுமன்னார் கோவில் ஊராட்சி ஒன்றியம் வழியாக அலுவலகம் மதிய உணவு | காட்டுமன்னார்கோவில் கடைவீதி | காட்டுமன்னார் கோவில் கிழக்கு ஒன்றியம் காட்டுமன்னார் கோவில் மேற்கு ஒன்றியம் திருமுட்டம் கிழக்கு ஒன்றியம் திருமுட்டம் மேற்கு ஒன்றியம் திருமுட்டம் பேரூர் |

**25.11.2023 (சனிக்கிழமை)**

| நேரம் | வழி | நிகழ்ச்சிநடைபெறும்இடம் | நிகழ்ச்சியில்கலந்துகொள்ளும் ஒன்றியம்/நகரம்/பேரூர் |
|---|---|---|---|
| காலை 9.00 மணி | நெய்வேலி ஆர்ச்கேட் வடக்குத்து வழியாக | கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வரவேற்பு வடக்குத்து கன்னியாக் கோவில் பாலம் | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம் குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம் வடலூர் நகரம் குறிஞ்சிப்பாடி பேரூர் |
| காலை 9.15 மணி | கும்பகோணம் சாலை வழியாக | வடலூர் நான்கு முனை சந்திப்பு | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம் வடலூர் நகரம் |
| காலை 9.30 மணி | ரோட்டு ஆண்டிக்குப்பம், யூனியன் ஆபிஸ் வழியாக | குறிஞ்சிப்பாடி பேருந்து நிலையம் | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம் குறிஞ்சிப்பாடி பேரூர் |
| காலை 10.00 மணி | பெத்தநாயக்கன்குப்பம் தம்பிப்பேட்டை தோப்புக்கொல்லை வழியாக | குள்ளஞ்சாவடி அண்ணாசிலை அருகில் | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம் குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம் |
| காலை 10.30 மணி | சுப்பிரமணியபுரம் சேடப்பாளையம் அன்னவல்லி கண்ணாரப்பேட்டை வழியாக | பச்சாங்குப்பம் இரட்டைரோடு அருகில் | கடலூர் கிழக்கு ஒன்றியம் கடலூர் மேற்கு ஒன்றியம் |
| காலை 11.00 மணி | பச்சையாங்குப்பம் ஹவுசிங் போர்டு கடலூர் துறைமுகம் சாலைக் கரை வழியாக | ஹவுசிங்போர் வழியாக கடலூர் துறைமுகம் மணிக் கூண்டு அருகில் | கடலூர் மாநகரம், கடலூர் துறைகம் பகுதி |
| காலை 11.15 மணி | கடலூர் துறைமுகம் சாலைக் கரை வழியாக | கடலூர் சீமாட்டி அருகில் | கடலூர் மாநகரம் திருப்பாப்புலியூர் பகுதி |
| காலை 11.30 மணி | அண்ணாபாலம் வழியாக | கடலூர் மஞ்சக்குப்பம் தலைமை அஞ்சல் நிலையம் அருகில் | கடலூர் மாநகரம் மஞ்சக்குப்பம் பகுதி |
| காலை 11.45 மணி | மாவட்ட மருத்துவனை சாலை வழியாக | கடலூர் செம்மண்டலம் ஜங்ஷன் அருகில் | கடலூர் மாநகரம் மஞ்சக்குப்பம் பகுதி |
| மதியம் 12.00 மணி | நெல்லிக்குப்பம் சாலை வழியாக | கோண்டூர் சாலை சாவடி முதல் வரக்கால்பட்டு வரை | கடலூர் வடக்கு ஒன்றியம் கடலூர் தெற்கு ஒன்றியம் |

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.